ஓம் சுத்த சக்தி.

இளந்தமிழ்த் தளிர் கூ.

சுத்தானந்த பாரதியார் இயற்றிய

நாடகக் கலை விளக்கம்.

THE ART OF DRAMA.

—— o ——

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டுக்கு நல்ல பயன்.

பதிப்பாளர்
மாசி,
தபாற் பெட்டி, 14,
கோலாலம்பூர்
1935

முன்னுரை.

அன்னை திருவருளால் 9-வது தளிர் துளிர்த்தது. தமிழில் பல நாடக நூல்கள் முன்னே இருந்து காலத்தில் மறைந்தன. இந்த நாடகக்கலை விளக்கம் இனி வரும் புதுத் தமிழ்நாட்டு நாடகக்கலை யிலக்கணம். இதில் பல நாடுகளின் நாடகக்கலை விளக்கமும் உலகில் சிறந்த நாடகாசிரியர்களின் விவரமும், நாடகத்தின் புனிதப் பெருமையும், நாடகப்பொருள், பயன், நடிகர் இயல்பு, நடிக்கும் முறை, நவரசபாவனை, நடிகரின் தூயவாழ்வு முறை, நாடகத்தைப் பொதுநலக் கல்வியாக்கும் விதம் முதலிய பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. நூலாசிரியர் சிறந்த நடிகர். சுமார் 50 நாடகங்களுக்கு ஆசிரியர். வங்கம் ஹிந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆரிய நாடகக்கலைகளை நன்கு அறிந்ததன் பயனாகத் தனது நீண்ட அனுபவத்தைத் திரட்டி இந்நூல் வடிவில் அளித்துள்ளார். இந்நாடக இலக்கணத்திற்குத்தக்கவாறுதனது நாடக நூல்களை எழுதியுள்ளார். விரத வைராக்யம், அப்பர் பரமஹம்ஸலீலை, ஜீவகாருண்யபுத்தர்பாசுபதாஸ்திரம் ராணி பத்மாவதி, ஒராசியன், ப்ரதாபசிங்கன், ஜயவீரன், ஆஷாடபூதி சீமைச்சரக்கு, மீராபாய், சைதன்யமங்களம், சீர்திருத்தம், ஒற்றுமை முதலிய நாடகங்களை நண்பர் அறிவர். இவ்வரிய இலக்கியங்களையெல்லாம் ஆண்டுதோறும் ஒன்றிரண்டாக மாசிமலர்த் தொகுதியில் வெளியிடக்கருதியுள்ளோம். அன்பர் ஆதரவும் தெய்வத்திருவருளும் எம்மை முன்னின்று நடத்துக! ஓம் சக்தி!

"மாசி"

அருங்கலை வளர்ச்சி.

இயலழகை இசைப்பது காவியம்
   இயலைக்கண்முன் இலக்குவ தோவியம்
செயலுருவிற் செதுக்கி யுயிர்க்கலை
   திகழவைப்பது சீரிய சிற்பமாம்.
கயல் விழியும் கனியிதழ் வாயும் பூங்
   கையுங் கஜ்ஜல் ஜலிரோனுங் காலிலும்
இயலின்பம் விளையாடப் பொன்னுருடல்
   இயக்கு நற்கலை நாட்டியம் என்னுவாம்.
தூய வாழ்வைத் துலக்கி யுலகியல்
   தோற்றவைத்து நடித்திடல் நாடகம்
நேய மன்பு நெறி யறி வோற்றுமை
   நிலவ மாந்தர் நிறுவுதல் சங்கமாம்.
நோய் களைந்து நலஞ்செய் மருந்துபோல்
   நுட்பமான கலைச்சுவை யின்பயன்
ஆயிரம் வகை யாக நுகருவோம்
   அமுதை யுண்ணச் சலிப்பவர் யாவரோ
சத்திரங்கள் மடங்களுங் கோயில்கள்
   சாத்திரங்கள் கலைகள் பயின்றிடும்
வித்தியாலயம் ஆதுக! நாட்டினில்
   வீரரும் அறிவாளரும் ஓங்குக!
முத்தமிழின் முரசொலி வானுற
   முழங்குக! நம் பழம் புதுச் செல்வியிப்
புத்துலகினை யாளுக! மங்களப்
   புன்னகையில் மனைவிளக் கேற்றுவாம்!

அழகு வணக்கம்.

அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம்
அழகின் இன்ப வனத்தில் உலாவுவோம்
அழகழகினை ஆருயிர்க்கூட்டுவோம்
அழகை வாழ்வெனும் வீணையில் மீட்டுவோம்
அழகணியை யனைத்திலும் போற்றுவாம்
அழகிலாத தகுபமேன் றேட்டுவோம்
அழகி னுலய மாக்கியிப் பூவினை
அழகுத் தேன்மலர் கொண்டன்பு செய்கு வாம்
வளங் குலுங்கும் இயற்கை வனப்பினில்
வளைந் துலகை யளாவிடும் வானத்தில்
குளிர்ந்த தென்றல் குலாவிடும் பூக்களில்
குயிலின் பாட்டொடுங் கொஞ்சுங் குழலினில்
தெளிந்த காலையின் செம்பொன் முகத்தினில்
செகத்தைக் காத்திடும் செங்கதிர் வெள்ளத்தில்
களிமதிழகங் கண்டகம் விம்மிய
காதல்முண்டலை வீசுங் கடலினில் (அழகு)
முனிவரின் அருள்ளானந்த வுள்ளத்தில்
முத்தமிழ்க் கவியுண்டவர் நாவினில்
இனிய நண்பர் பணிசெய் குழுவினில்
இணைந்த காதலர் இல்லற வாழ்வினில்
புனிதநல்லடியார் திருக் கூட்டத்தில்
புதல்வர் வீரப்பொலிவுறு வாழ்வினில்
நனிக்கலைகள் வளரும் சுதந்திர
நாட்டுத்தாய்த்திருப் புன்னகைச் சொக்கினில்
[அழகுத்

1. கலை நுட்பம்.

உலகம் அரங்கம்; அதில் ஒவ்வொரு உயிரும் ஒரு வினையுடல் தாங்கி நடிக்கிறது. உலகக் காட்சிகளும் திரை திரையாகப் படலம் படலமாக மாறுகின்றன. இக் காட்சிக் கிறைவி இயற்கை, சக்தி. உலகை "சக்தி விலாசம்" என்பர் புலவர். சக்தி நாதனான ஆண்டவன் நடராஜனாகவும், அரங்கனாதனாகவும் எங்கும் விளங்கு கிறான். உயிர்களைத் திருமேனியாகப் பூண்டு இறைவன் திருவிளையாடுகிறான். அவனுடைய ஆடல் ஒரு நொடி நிற்கினும் எல்லாம் சீர்குலையும். ஒவ்வொருவர் உள்ளும் அவன் இதய நடராஜனாக விளங்குவதை ஞானிகள் உணர்வர். ஆதலின் நாடகக்கலை உள்ளத்தினின்று உலகி ளாவியது. நான்கும் (அறம்பொருள் இன்பம் வீடு,) ஒன் பதும் (நவரஸம்) நாடகத் தெய்தும்.

பாரதநாட்டின் நாடகக்கலை அருட் புலவர்களால் உயர்ந்த அத்யாத்ம நோக்கத்தைக்கொண்டு வகுக்கப்பட் டது. அது இணையற்றது. பஞ்சபூதங்கள், தன் மாத் திரைகள், ஞான கர்மேந்திரியங்கள், தசநாடிகள், அந்

தக்கரணம் முதலிய நாடக பாத்திரங்களுடன் தூல சூக்ஷ்ம, காரண சரீர மேடைகளில் ஜீவக்காதலி பரமாத்மக் காதலனை விரும்பி நடிக்கும் நாடகமே வாழ்வு.

இதுவே நாடக நுட்பம்.

---

2. நாடகப் பிறப்பு.

சிதாகாசத்தில் சுஷும்னா நாடியைக் கொண்டு யோகசக்தியானவள் மீட்டும் ஓங்காரத்தினின்றே நாதக்கலை யுதித்தது. இதயச் சிற்சபையில் விளங்கும் பரமாத்மாவைக் கூடுதற்கு ஜீவாத்மா புரியும் யோக சாதனத்தினின்றே நாடகக்கலை யுதித்தது. ஜீவக்காதலி தலைவனுடன் இன்புறக் கூடுமுன் எத்தனை இடர்கள், மனமயக்கங்கள், வீரியத் தினவுகள், அகங்காரத்தின் அசுர மாயங்கள் இன்ப துன்பம் இசை வசை சோர்வு துணிவு ஆகிய தொந்தவினைகள், முக்குணப் போராட்டங்கள் தொடருகின்றன! இவையெல்லாம் படலம் படலமாக எத்தனை காட்சிகளுடன் நம்முள் நாடகமாடுகின்றன!

சுத்த மனம் ப்ருந்தாவனம் போன்றது. அதில் ஜீவபர லீலை நாள்தோறும் நடக்கிறது. இந்திரன் வேண்ட, பிரமனே அருமறையின் அழகுகளைக் கூட்டி ஒரு நாடக வேதமியற்றி, தேவர்களை மிக்க மகிழ்வித்ததாக ஐதிகம் கூறும்.

இந்த உயர்ந்த ஜீவப்ரம்மைக்யத்தை விளக்கி வாழ்வைக் கடவுளுணர்வில் அமைக்கவே மகா யோகிகளும் உயர்ந்த தீர்க்கதரிசிகளுமான சுகப்ரம்மம், வியாசாசாரியர், வால்மீகிமுனிவர் முதலியோர், **பாகவத பாரத ராமாயணாதி** இதிகாசங்களை அருளி, உலகில் ஒப்பற்ற பாரத நாகரிகத்தை உண்டாக்கினர். வேதமே நமது புராதனமான, என்றும் புதிய நாடகம். மனிதனின் தெய்வத்தன்மையைக் கொள்ளைகொண்டு மறைக்கும் அகங்கார, காமக்ரோதாதிகளான வாளன், நமுசி முதலிய அரக்கர்களின் இருட் குகையை விஞ்ஞானமாகிய இந்திரன் வைராக்யமான குலிசத்தால் தகர்த்து, ஞானம், அமுதம், இன்பம், வீரியபலம் ஆகிய பசுக்கள், குதிரைகள், முதலிய கடவுட் செல்வங்களை விடுவிப்பதே வேதவரலாறு. இந்த நாடகத்தில் தெய்வத்தன்மையர்களான சூரியன், அக்னி, அஸ்வினிதேவர், ஸோமன்

ஆகியோர் பாத்திரங்கள். நமது பாரததர்மதேவி நாத வித்தையை அணிந்தே நம்முன் விளங்குகிறாள். செல்வக் கலைமகள் யாழால் அறிவமுது பொழிகிறாள். நாரதர் தனது வீணாகானத்தால் பக்திரசத்தை மாந்தர் உள்ளத்தில் பாய்ச்சுகிறார். கண்ணன் தனது மோகன முரளியால் ஜீவகோபிகளை வசப்படுத்துகிறான். இராவணன் ஸாமகானத்தால் சிவனருள் பெற்றான். நமது தமிழ்நாட்டுப் பெரியாரான சிவத்தொண்டர்களும் ஆழ்வாராதிகளும், கடவுட்காதலிற் பொங்கிய இன்னிசை யூற்றினால் இறைவன் அருளையும் காட்சியையும் இன்பத்தையும் அடைந்தனர். நாதக்கலை நமது பாரத ஜாதியின் ஆவியில் ஊறிப்போயிருக்கிறது. பாரத தர்மத்தின் சிகரம் ஜீவப்ரம்மைக்கியம். வாழ்வே நாடகமாகத் தொடங்குகிறது. பாவனாசக்தி மாந்தருடன் பிறந்தது. விலங்குகளும், தாவரங்களுங்கூட இசையின்பம் உண்கின்றன. விஷத்தன்மையை மறந்து நல்ல பாம்பு குழலிற் கட்டுப்பட்டு ஆடுகிறது. நமது பாரத சமுதாய வாழ்வின் ஒவ்வொரு அணுவும் இசையமுதில் ஊறிப்போயிருக்கிறது. ஒவ்வொரு சடங்கிற்கும் நாதவேதம் முன்னிற்கிறது. பாரத ஜாதி இசையின்

பச் சோலையிலேயே உண்டு உறங்கி விளையாடி வீரச் செயல் புரிந்து, இறைவின்பத்திற் கலக்கிறது.

---

4. நாட்டியம்.

பண், பரதம், நாடகம் இம்மூன்றும் தேவர்களிடமிருந்து உற்பத்தியாகி, தெய்வத்தன்மை பொருந்தி, உலகில் மாசற்ற இன்ப வாழ்வைப் பரப்புதற்கே நிலவுகின்றன. பிரம்மா, நாரதர், பரதர், யக்ஞவல்கி முதலியோர் இசைவளர்த்தனர். சிவனின் ஆனந்த நடனமும், கண்ணனின் ராஸலீலையும் நாட்டியத்தைத் துலக்கின. நன்னாட்களில் கோலாட்டம் குதித்துப் பாடல் முதலியன சிறந்த நோக்கத்துடன் ஏற்பட்டன. காலத்தால் எப்படிச் சீர்கெடினும் இசை, கூத்து நடனம் முதலியன நமது கோயில் திருவாராதனங்களில் மிகச் சிறந்த நோக்கத்துடனேயே இணைக்கப்பட்டன. பரதம் என்பது கலைச்சொல். ப = பாவனை + ர = ராகம் + த = தாளம். இசையின் மூன்று உயிர்களான பாவனை, ராகம், தாளம் இவையே "பரத" என்னும் மொழியின்

பொருள். பரத நாட்டியம் இம்மூன்றையும் ஜீவனாகக் கொண்டது.

---

5. நாடகப்பயன்

பொறிபுலன் வழியே அறிவுபுகட்டல், பொதுநலக் கல்வி, புனித வாழ்வு, இன்பதுன்பவுலகின் இயல்பை நன்கு விளக்கல், நன்னெறிகோடல், ஒழுக்கம், வீரம், அழுக்கறு சிந்தை, உண்மை, திண்மை, நன்மை, அறிவுடன் மாண்பு பெற்ற மனிதத்தன்மை, காமம், வெகுளி, மயக்கம், சிறுமை, பொருமை, முதலிய புல்லியல் மடமையை வென்று தெய்வீக வாழ்விற்கு உயர்ந்து, இகபரசுகம் பெற்றிலகும்வழியை அததற்கேற்ற புலவரைக்கொண்டு, காட்சிகள் பல பல காட்டி விளங்குதல் நாடகமென்று நவின்றனர் புலவர்.

---

6. நாடகவகை.

மேனாட்டில் Mysteries, Miracles, Moralities, Interludes, Tragedies, Comedies, Histories, Pastorals, Melodramas, Pantomimes, Operas, என்று பல வகையாக நாடகக்கலை இயங்குகின்றது. நமது நாட்டிலும் காதல், களிப்பு, வீரம், கருணை, நகைப்பு, வியப்பு, சினம், அச்சம், மயக்கம், இரக்கம், விருப்பு, வெறுப்பு, கொலை, பகை, பொறுமை, வசை, இழிப்பு, அவலம் இடர், பேய்மதம், அகந்தை, ஆத்திரம், அமைதி, பொறுமை, ஆர்வம், கொடுமை, செம்மை, தளர்வு, துணிவு, ஈகை, இரக்கம், பக்தி, ஞானம், வைராக்கியம், முதலிய தன்மைகளைக்காட்டி அறிவும், இன்பமும், விளைவிக்கும் நாடக வகைகள் பல. அன்பு விதைத்து வீரந்துளிர்த்து, அனுபவம் கிளைத்து, அறிவு மலர்ந்து இன்பங் கனிதல் கதைக்கினிது.

கடவுளன்பு, கல்விகேள்வி, தீரம், நடைமுறைகளிற் சிறந்த வீரன், அரசன், பெரியாரைத் தலைக்கொண்டு உலகின் ஏற்றத்தாழ்வுகளைத் தாண்டி இன்புறுவதை ஐந்து முதல் பத்திற்குட்பட்ட அங்கங்களில் காட்டுதல்

சிறந்த நாடகம். இது இன்ப நாடகம் (comedy) துன்ப நாடகம் (tragedy) என இருவகைத்து. உண்மைக்காதல், வீரம், அன்பு, இவற்றைப் பொருளாகக் கொள்ளலாம். தலைவனுக்கு முதன்மை தருவது நாடகம். இசை, நாட்டியத்துடன் பல பெண்களைக்கொண்டு தலைவிக்கு முதன்மையளிப்பது நாடிகை. இது நான்கு அங்கங்களைக் கொண்டது. நாற்குணமும், கற்பும், அழகும், சீலமும், அடக்கமும், இனிமையும், மென்மையும், தலைவிக்கு இன்றியமையாக் குணங்களாகும் புராணம், சரித்திரங்களினின்று இத்தகைய தலைவனும் தலைவியும் தேர்ந்தெடுக்கப்படுவர். இதுதவிர, கற்பனை ஒருவகை நாடகம்; காலத்திற்கும், அதன் சீர்திருத்தத்திற்கும் ஏற்ற பயனையுண்டாக்கக் கற்பனையாக நாடகங்கள் புனைந்து நடத்தலாம். சாதாரணக்குடும்பவாழ்வு, சமூக வாழ்வு, நாகரிக முறைகளை இக்கற்பனை வாயிலாக நடத்தலாம். வீரச்செயல்கள், பெரியோர் வரலாறுகளை மிகவுயர்ந்த செய்யுள் நடையில் பாடி நடித்தல், ஒரே அங்கத்தில் நவரசங்களைக் காட்டும் ஒரு சம்பவத்தை நடித்தல், மனிதவியல்பின் நன்மை தீமைகள், வீரம் வஞ்சம் சிறுமை முதலியவற்றை மூன்று அங்கங்

களிற் காட்டல், தேவாசுரயுத்தங்களை நடித்தல், ஹாஸ்ய ரஸங்களைச் சிறு கதைகளாலும், வேடிக்கைப் பேச்சுகளாலும் காட்டி சமய சமுதாய சீர்திருத்தஞ்செய்தல், வாய் பேசாது ஜாடைகளினாலேயே நடத்தும் கதை கேளி, முதலிய எத்தனையோ வகை நடிப்புகள் உள்ளன. சமய சமுதாய சீர்திருத்தம், ஆன்மவுணர்ச்சி, கடவுளன்பு, கடவுளுறுதி, தூயவாழ்வு, உட்புற விடுதலை, ஒற்றுமை, சமரஸம், வாழ்வை யோகமாக்குதல், அதற்கேற்ற நடை முறைகளையும் ஸாதனங்களையும் நன்கு விளக்கல், காலத்திற் கொவ்வாது கேடான பழக்க வழக்கம் நடைமுறைகளைக் கண்டித்தல், நகைப்பாலும் உறுத்திச் சொல்லுவதாலும் அல்லன விலக்கி, ஆவன துலக்கல், இனிய தூய பாட்டுகளால் சுத்த முக்தஸமத்வ ஸத்ய ஸாந்த தர்மத்தை மக்கள் மனத்திற் பதிய வைத்தல்—இவையே நமது நாடகக்கொள்கை. பொருளுக்கேற்றபடி நடிப்பு நயம்பெற்றிலங்கும். சுவையாலும் அங்கத்தாலும் முறைவகுக்கப்படினும் புலவர் உள்ளொழுச்சிக்கேற்றவாறு எத்தனையோ நுட்ப வகைகளாக நாடகம் அமைக்கலாமாதலின் பெயர்க்கட்டுப்பாடுகள் நமக்கு வேண்டாம். அறிவு ஆயிரங்கதிர்பரப்பி எல்லையற்றகாட்சிகளைத் துலக்குக!

7. நவரஸபாவனை.

சிங்காரம் (உவப்பு) வீரம், நகை, சாந்தம், கருணை குற்சை (இழிவு) அற்புதம், பயம், கோபம், முதலிய நவரசங்களைக் கொண்டன நமது நாடகங்கள். இனிய குரலும், பாட்டும் அதற்கமைந்த பேச்சும இணைந்து, நாடகப் புலவன் கைகொட்டியும், கண்மலர்த்தியும், முறுவல் பூத்தும், சிரித்தும், குரலை உயர்த்தியும் இன்பத்தைக் காட்டுவான்; பெண் வேடம் புனைவோன் இனிய முறுவல், அழகிய நாணம், கைக்குறிப்புகள், கண் மலர்ச்சிகளால் மெல்லிய குரல் கொண்டு இன்பம் விளக்க வேண்டும். நகைச்சுவையில் எள்ளி நகைத்தல், அமைதிப் புன்னகை, வஞ்சச்சிரிப்பு, பெருநகை, இடி நகை, இடர்க்கண் நகுதல், வெறிநகை, செருக்குடன் நகுதல் எனப் பலவகையுண்டு. தலையிற் கைவைத்தல், விரிந்தகூந்தல், மயிர் பறித்தல், பெருமூச்சு, அழுகை, அலமரல், காலை அழுத்திமிதித்தல், கண்ணை மேலே பார்த்தல், நிலைப்பின்மை இவற்றால் துன்பக்தூறி காட்டலாம். வாயையும் கண்ணையும் அகலத் திறத்தல், புருவஞ்சுருக்கல், கையை உயர்த்தல், உடல் நடுங்கல்,

மார்புதுடித்தல், விரைவின் உயிர்த்தல், மெலிகுரல்,- படபடப்பு, துடிதுடிப்பு முதலிய குறிகளுடன் அச்சப் பொருளைச்சுட்டி அச்சச்சுவை காட்டலாம். கழுத்து விடைத்தல், மூக்கு விரிதல், தலையை வக்கரித்து ஆட்டல், கையை உதறல், நெருப்பெழ நோக்கிக் கண்ணை யுருட்டல், நெற்றி சுருங்கல், தசைகள் இறுகல், விரல்களை மடக்கிக் குத்துவதுபோல் ஓங்குதல், உடல் படபடத்தல், பல் நெருநெருத்தல், கால் மிதித்தல் முதலிய குறிகளால் கோபங் காட்டலாம். இவைகளைத் தாழ்த்தி நோக்கி உதட்டை விரித்து, 'ஹா! ஐயோ' என்று மூச்சு விட்டு, விழிநீரை அடிக்கடி துடைத்துக்கொண்டு இரக்கத்தைக் காட்டலாம். கையால் தடைக்குறி காட்டல், விரல்களை உதறல், முகவிகாரம், பல் இறுக்கம், குரலில் கண்டிப்பு, ஆத்திரம், சினம் இவற்றால் வெறுப்பைக் காட்டலாம். முகவாட்டம், ஒரு கைப்பிடியால் மறுகையில் அடித்தல், துடித்தல், மறதிபோலிருந்து யோசித்தல், மார்தட்டி அகந்தை பேசல், அழுதல், ஆவலாதி, சிறுமை, முறையிடல், வயிற்றெரிச்சல் படுதல், பல்லைக் கடித்தல், கையை நெரித்தல், கண்ணை உருட்டிப் பார்த்தல் இவற்றால் பொறாமையைக் காட்டலாம்.

கண், வாய், கைகளை விரித்தல், கையைக்கொட்டி முக வாய்க்கட்டையில் வைத்தல், உடல் ஒரு நிலையில் தம்பித்திருத்தல், ஆச்சரியமாகிப்பேச்சடைத்தல் முதலிய வற்ருல் **வியப்பைக்** காட்டலாம். நெற்றிவிரிதல், புருவம் வளைதல், உதட்டை மலர்த்தல், இன்பப் புன்னகை, ஆவலுடன் நோக்குதல், கடைக்கண், கண்ணைப்பாதி விழித்தல், மெல்லிய முகமன், வசீகரமான இனியகுரல், பாட்டு, பரவசம், உடலை வளைத்தல், முதலிய ஜாடைகளால் **காதலைக்** காட்டலாம். உள்ளக்கிளர்ச்சியும், உண்மையுணர்ச்சியுமிருந்தால் நடிப்பு இயல்பாகவே வரும். நடிப்பு இயல்பாக அமைவது நலம். ரசங்கள் ஒன்பதாக வகுக்கப்படினும், அவற்றுள் எத்தனையோ கிளைகளுள்ளன. முக்குணப் போராட்டமான வாழ்வில் ஆயிரக்கணக்கான மாற்றங்களும் விகாரங்களும் உள்ளன. அவற்றின் உணர்ச்சி காட்சி, இடம், காலம், செயலுக்கேற்ப உணர்வும், மொழியும், நடிப்பும் அமைதல் வேண்டும்.

---

8. இயல்பாய் நடித்தல்.

நடிப்பில் மிதமிஞ்சிப்போனால் இயற்கையழகு போய் விடும். திருடன் திருடவந்த இடத்தில் ஆரவாரஞ் செய்து கூத்தாடுவதும், தமிழ் மேடையில் மற்ற நாடகக் கதைகளை நடிக்கும்போது கொச்சையாகப் பேசுவதும், கதையினிடையே விகடனைத் தனியாக சம்பந்தமின்றி பூஜையில் கரடி ஓட்டுவதுபோலப் பேசவிடுவதும், காதற் காட்சியில் ஆபாசமான நடிப்புகளையும், கொச்சைப் பாட்டுகளையும், புல்லியல் மொழிகளையும் இடர்க்கட்டையாகப் புகுத்திக் காதலின் பெருமையைச் சிதைப்பதும், கற்புத் தெய்வத்தின் கௌரவத்தைக் குறைக்கும் இழிமொழிகளும், நடிகர்களின் சொந்த மனத்தாங்கல்களை மேடை மீது காட்டுவதும், தான்கொண்ட வேடத்திற் கொவ்வாத கதை வளர்த்தலும், ஒழுக்கத்தவறும், இழுக்க நடையும், தீயபழக்கங்களும் நாடகக் கலையைச் சிறுமை செய்வதாகும். முதன்மையாகத் தற்காலம் காமம், விகடம் இரண்டுமே நாடக மேடையில் அழிநடம்புரிகின்றன.

---

9. நகைச்சுவை.

ஆத்மஞானம், ஆத்மவீரம், தூய வாழ்வு, கற்பு, உண்மை, தியாகம், அன்பு, உண்மைக்காதல், அழகு அருள், இவற்றைப் பார்ப்போர் மனத்திற் பதியவைத்து இவற்றிற்கு எதிர்மறையான தன்மைகளை யொழிக்கச் செய்வதே நடிப்பின் கருத்து. காம விகட நாடகங்கள் சிருங்கார ரசத்தை வெங்காமச் சுரசமாக்கி நடை முறையைக் கெடுத்து, புனிதமான நாடகக் கலைக்கே ஒரு இழிவைச் சேர்த்த கொடுமையை நோக்கினுல், இன்னும் ஒரு நூற்றூண்டிற்கு சிற்றின்பக்காதலுக்குப் பதில் பேரின்பக் காதலைப் புகுத்தி மஹான்களின் சரித்திரமே நடித்தால் நலமெனக் காண்கிறது. சமூகம் பரிசுத்த மடையவேண்டும். கற்பும் உண்மையும் நாடகம் பார்ப்போர் மனத்திற் கனலிடவேண்டும். நமது சமூக வாழ்வில் எண்ணிறந்த நகைச்சுவைகளிருப்பதால் நமது சீர்திருத்த நாடகங்களில் தனியாக விதூஷகன் வேண்டியதில்லை. மேனுட்டு நாடகங்களிலும் மத்திம காலத்தில் விதூஷகன் தனியாயிருந்தான். இப்போது நாகரிக நாடகங்களில் தனியாக விதூஷகனுக்கு இடமில்லை.

முற்கால நீதி மன்னர் தங்கள் அரசியற் சுமையைச் சிறிது மறப்பதற்கும் மனக்கவலைகளை மாற்றுவதற்கும் சிற்றின்பத் தூதுகளுக்கும் விகடனை வைத்துக்கொண்டிருந்தனர். இக்காலத்தில் மன்னர் அப்படி விகடனைத் தனியாக வைத்துக்கொள்வதில்லை. ஹாஸ்ய ரசத்தை நாடகத்தில் கதையிடை இணைப்பதே இயல்பாகும். தனியாக இடைக் காட்சிகளாக வேண்டுமெனின் அறிவு புகட்டுவதற்கு அமைந்த, பெருந்தன்மையான நகைப்புக் கதைகளும், பாட்டுகளும், சமபாஷணைகளும் நடத்தலாம். ஆனால் இவற்றால் கதையின் தொடர்பும், இயல்பு நெறியும் கெடாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

---

10. பேச்சினிமை.

பேச்சில் உருக்கம், அமைதி, உயிர், உணர்வு இனிமை வேண்டும். சினப்புயலையும், ஆசைத்தீயையும், நாசுக்காகக்காட்டலாம். பிடாறிமாதிரி கூரை கிழியக் கூவவேண்டாம். காட்டுக்கும் மேட்டுக்கும் காதடைக்கச் சத்தமிடவேண்டாம். சந்தைக்கடையில் ஏலங்கூறுவோன்

போலத் தொண்டைகிழியவேண்டாம். அழுத்தி, உறுத்தி அளவுடன் உரத்திப்பேசுக. வார்த்தையை மழுப்பக் கூடாது. மூக்கால் முனங்கக்கூடாது; கிணீரென்று தரையிலுள்ளவர்களுக்கும் கேட்கும்படி தெளிவாகப் பேசவேண்டும். பேச்சும், நடிப்பும் ஒத்திருக்கவேண் டும். காற்றைக் கையால் ரம்ப மறுத்தல், ஆடிக்காற்று அலைக்கும் சவுக்குமரம்போல உடலை இங்குமங்கும் ஆட் டல், பாடும்போது கையால் லாடுபிடித்தல், இடுப்பைச் செக்காட்டல், தும்பல் வராது முக்குவோன் போல முகத்தைச்சுளித்தல், கணவாய் மாதிரி வாயைத்திறத்தல் இன்றி, வண்டுண்ணும் மலர் போல வைத்துக்கொள்ள வேண்டும். எல்லாம் இயற்கையோ டிணைந்திருக்கவேண் டும். நகைத்தல், பகைத்தல், நாணல், சினத்தல், வெறுத்தல், வெறித்தல், புலத்தல், உவத்தல் எல்லாம் இயலழகின் திருவடிவாயிருத்தல் வேண்டும். அன்னிய மொழியினரின் வேடம் புனேவோர்பேச்சில், "நம்பல்கி சொப்புவாரான்! (எனக்குச் சிரிப்பு வருகிறது,) நான் சொல்ரான் நீ கேக்ரான்" . (நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்) போன்ற விகாரங்களும், வலைஞன் தோட் டக்காரன், சேவகர், வேடம் புனேவோர் "என்னுண்ட்ரே

ரோசனை ”? (என்ன யோசனை சொல்) என்று மிகவும் கொச்சையாகப் பேசுவதும் தமிழின் பெருமையைக் கெடுப்பதாகும். அதனால் பண்படாத சிலர் சிரிக்கலாம். மொழிகளை இயல்பாகப் பேசி அந்தந்த நடிப்புகளையும் இயல்பாக்கமுடியும். தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லாரும் கல்வி கேள்விகளிற் சிறந்து இளந்தமிழ்க் குயில்களாக இத் தென்மொழிச் சோலையில் உலாவ வேண்டுமென்பதே எமது கருத்து. பணியாளர்களில் நன்றாகப் படித்தோரும் உள்ளனர். அவர்கள் கொச்சைமொழி பேசவேண்டுமென்பதில்லை. ஜாதி விரோதம், மத விரோதம் மனவருத்தம் மூட்டும் படியான வசைச் சொற்களும் இடிப்புரைகளும் நாடக மேடையில் வேண்டாம். ஒற்றுமை, சமரஸம், நட்பு நேயம், நல்லறிவு—இவை நமது கொள்கை. உதவாப் பழக்க வழக்கத்தைப் பாட்டின் மூலமும், காட்சிகளிடையே நயமான பேச்சுகளாலும் மாந்தர் உணர்ந்து ஒழிக்கும்படி செய்ய வேண்டும். முதன்மையாக இன்ன விதமாக நல்வாழ்வு வாழவேண்டுமென்றே காண்போர் அறியும்படி நடித்தல் வேண்டும். காலிப்பேச்சுகளையும், கொச்சைப் பாட்டுகளையும் பெருந்தன்மையான நடிகர்

கள் விலக்கவேண்டும். சபையில் பகிரங்கமாகக் காதலர் ஆலிங்கனம் செய்வது பாங்கல்ல. முதல்தரமான காதல் நாடகம் சாகுந்தலம். அதில் அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு, பெருந்தன்மை, மென்மையுடன் தலைவி அடக்கமாக விளங்குகிறாள்.

---

11 பொருநர் அமைப்பு.

நல்லதேககக்கட்டு, உற்சாகம், கம்பீரமான முகம், வசீகரத்தன்மை, புன்னகை, மணிக்குரல் நடிப்பிற்கேற்றபடிப்பு, புனைப்பிற்கேற்ற நினைப்பு, அளவு, பொருளறிவு, ஞாபகசக்தி, குறிப்பறிதல், சமயோசிதம், தடையற்ற தெள்ளுரை இடையே பேச்சுமறந்து முழியாமை, எடுத்துக்கொடுப்போனை (Prompter) உடனே கவனித்தல், சபையில் முழிக்காமல் யுக்தியாகக் காலத்தை நிரப்பல், வேஷத்தை இலக்கணப்படி பூணல், சபை நிறைந்திருத்தல், நடுக்கம், கோழைத்தனம் சபைக் கூச்சமின்மை, தூயவொழுக்கம், கள் சுருட்டு புகையிலை கஞ்சா, விபசாரம், நாஸ்திகம், பிறமத நிந்தை, இவற்றை

அறவே யொழித்தல், நாடகமாடுவதற்கு இரண்டு நாளை க்கு முன்பும் பின்பும் சிற்றின்ப நினைப்பின்மை, கூடு மானவரையில் ப்ரம்மச்சரியம் காத்தல், அடிக்கடி தனி மையில் நடித்துப் பார்த்தல், நல்லோர் சேர்க்கை, பிற மனைவியரைத் தாயெனக்கருதல், சுசிருசியான வுணவு, விரதம், ஜெபம், தியானம், மனோவாக்கு காயசுத்தம் கலை வளர்ச்சி, பெருந்தன்மை, செருக்கின்மை, போட்டி பொறுமையின்மை, நாடகக் கலையை ஒரு யோக சாதன மாகக் கருதல் முதலியவை முதல்தரமான நாடக பாத் திரத்திற்குரிய திறமைகளாம். தனித்துப்பேசல் (Soliloquy) புறத்துப் பேசல் (Side speech) உரத்துப் பேசல், அதட்டிப் பேசல், நகைத்துப் பேசல், நாணிப் பேசல், இடித்துப் பேசல், அணைத்துப் பேசல், கவர்ந்து பேசல், வெறுத்துப் பேசல், சினந்து பேசல், புனைந்து பேசல், இணங்கிப்பேசல், எதிர்த்துப் பேசல், களித்துப் பேசல், ஒளித்துப் பேசல், மழுப்பிப் பேசல், முதலிய வற்றை இடத்திற்கேற்றபடி முகக்குறிப்பு, கைகுறிப்பு கண் குறிப்பு, நடைக்குறிப்புகளுடன் நிறுத்துப்பேச வேண்டும். நடிப்பில்லாப்பேச்சு தளுக்கில்லாவைரம்

போன்றது. பேச்சும் நடிப்பும் நாடகக்கலையின் நுரையீரல்கள்; பாட்டு குரல்வளை.

தலைவன், தலைவி அவர் துணையாக நின்று காட்சி நிகழ்த்துவோர் பொருநராவர். குண நல மாண்பும் கொள்கையுறுதியும், மன மொழி மெய்யில் மாசறுநிறையும், அறநெறி வழுவாத திறனுந் திண்மையும் இனியனவற்றிற்கு எடுத்துக் காட்டாக விளங்குந் தீரன், வீரன், அறிஞன், சாந்தன், அருளாளன், உள்ள வெற்றியும் உலக வெற்றியும் ஓங்கிசை பெற்ற வுத்தமத் தலைவன். இராமன், கண்ணன், விசயன், சிவாஜி, அப்பர், முதலியோர் தலைவர்க்கு உதாரணம். நண்பன், அமைச்சன், ஆசான், முனிவர், தூதன், காவலன், ஏவல்புரிவோன், முதலியோர் தலைவன்றுணைவர் ஆவர். அழகும், வனப்பும், அன்பும், மென்மையும், இனிமையும் கனிவும், இன்பமும், செழுமையும், கலங்கறு கற்பும், கணவன் பிரிவை ஆற்றாக் காதலும், அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பும், மின்றவழ் வண்ணமும் மயில்போற் சாயலும், குயில்போற் குரலும் மீன் போல் விழியும், தேன்மலர் முகமும், அமைதி அடக்கம், பொறுமை, நிறைமை பொருந்திய தலைவி மருந்தினு மினிதே! இத்தகைய

உத்தமத்தலைவருடன் தோழிமார், சேடியர், பரத்தையர், சக்களத்தியர் அரக்கத்தன்மையும், அட்டகாசமும், காம வெறியும் கடைக் குணங்களும் கொண்டோர் கூத்திடை வந்து காட்சியை வளர்ப்பர். சீதை, துரோபதை, தம யந்தி, கண்ணகி, மாதவி, பத்மாவதி, சம்யுத்தை, அல்லி, முதலியோர் பெண் பொருநர்க்கு உதாரணம்.

---

12 பாட்டு.

விருத்தங்கள் பொருள் எளிதாக விளங்கினல் அடிக் கடி பாடலாம். இராகதாளங்களுடன் கூடிய பாட்டு கள் மிகச் சுருக்கமாயிருக்க வேண்டும். காட்சிக்கு இர ண்டு போதும். பேச்சே அதிகமாயிருக்க வேண்டும். நல்லுரைகளால்தான் நாடகப் பயன் விளங்கும். தெலு ங்கு நாடகங்களில் பத்யங்களே அதிகம். அதுமாதிரி நமது நாடகங்களில் விருத்தங்கள் இருப்பது நலம். மிக வும் உருக்கமான காட்சிகளில் நல்ல பொருளுள்ள சிறு சிறு துக்கடாப் பாட்டுகள் பாடலாம். மேடையில் பாடும் போது கைத்தாளம் போட வேண்டாம். சொற்களை

அழுத்தந் திருத்தமாக உரைக்க வேண்டும். தலைவி யிரங்கலும், தலைவன் மயங்கலும், அழகை வர்ணித்தலும், தன்மை வர்ணித்தலும், ஒகை, வீரம், உருக்கம், உவப்பு நன்னெறி, அருள் வேண்டல் முதலியவற்றிற்கு விருத்தம் பொருந்தியது.

கூத்து

கூத்திலக்கணம் மிகவும் நுட்பவிரிவுடைத்து. இனிய பாடலும், சின்ன மேளமும், அபிநயமும் அமைந்து கருத்தைக் கையாலும், காலாலும், கண்ணாலும், முறுவலாலும் காட்டி யாடுதல் பரதநாட்டியம். 8 அல்லது 10 பேர் கை கோத்தாடல் குரவைக்கூத்து. இசை வசைப் பாட்டுகளோடு நகைச்சுவைததும்பஆடுதல் நகைக்கூத்து. அன்பின் ஆர்வத்தால் ஆடல் வரிக்கூத்து. பிரிவு, தணிவு, மகிழ்வு, காட்சி, முதலியவற்றைக் காட்டப் பல வரிக் கூத்துக்கள் உள்ளன. கூத்தென்பது முறைமையாக மனக் கிளர்ச்சியைக் காட்டுதற்கே பயனாகும். நமது நாடகங்களில் கடவுளின்பம், காதலின்பம், கலையின்பம், வெற்றியின்பம், வீரக் கிளர்ச்சி இவற்றைக் காட்டவே

தக்க இடத்தில் தக்க முறையில் இசையும், தாளமும் இசைந்து பண்ணும் பொருளும் பயனுந் தழுவிய குறிகளுடன் கூத்து நிகழும். ஒரு இன்பக் கிளர்ச்சி யெழுங்கால் நம்மை யறியாது கால்கள் நடமாடுகின்றன. அது போல இயல்பாகக் கூத்து நடைபெற வேண்டும்.

---

13 பயிற்சி முறை.

நடிகர் தமது பேச்சுகளை நன்கு பாடம் செய்து இயல்பாக்கிக் கொள்ள வேண்டும். முதலில் ஒவ்வொருவருக்கும் நாடக நூலைத் தருக. அவரவர் வேடங்குறிக்கவும். ஒவ்வொருவரும் நூலை முதலில் தனியாக முழுதும் வாசிக்கட்டும். பிறகு ஒரு நன்னாளில் நடிகர் அனைவரும் கூடி அவரவர் பங்கை முறைப்படி வாசிக்கட்டும். ஒரு நல்ல அறிஞர் அவ்வப்போது திருத்தட்டும். அதன் பின் மூன்று நாளைக் கொருமுறை புத்தகம் படித்தே நடக்கட்டும். இப்படி மூன்று முறை நடித்த பின், புத்தகத்தை எதிரே வைத்துக் கொண்டு இடையிடையே பார்த்து நடிக்கட்டும். இப்படி மூன்று முறையானதும்

புத்தகமின்றியே, தட்டினபோது எடுத்துக் கொடுக்க நடிக்கட்டும். இப்படி மூன்றுமுறை நடித்தபின் புத்தகமின்றியே நடிக்கலாம். முன் பின் னறிந்து, தன்னுடன் நடிப்பவன் பேச்சறிந்து நடிக்கவேண்டும். பாட்டுகளை முறையாகப்பயில வேண்டும். பழகும்போதும் பின் பாட்டுக்காரர் பக்கத்திலேயே இருந்து பாட வேண்டும். அதன் பிறகு ஒரு நாள் சில நண்பர்கள் முன்பு வேடமின்றி நடித்துப் பழகுக. நடிக்கையில் சபையோருக்குப் புறங்காட்டற்க. இறுதியாகப் பேசிச் செல்லும்போது, மேடையின் ஓரத்திற்குச் செல்லுக. நடுவேயிருந்து பேச்சை முடித்து சும்மா செல்லுதல் விகாரமாயிருக்கும். நடிகர் இயல்பாக அழகு பெற்றிருந்தால் அரிதாரப்பட்டை வேண்டாம். பூச்சுகள் அளவு வசியமாக வேண்டாம். அவை முகத்தை விரைவில் கெடுக்கும். காட்சிக்கேற்ற உடையணிக. பேச்சினும் நடிப்பினும் சில்லரைப்பாட்டுகளுக்கும், திரைச் சேலைகளுக்கும் (Scenes & Curtains) முதன்மையளிப்பது ஒரு குறை. அவசியமான திரைகள் போதும். அதற்குப்பெருஞ்செலவுகள் வேண்டாம். வேடமும் திரையும் இன்றிக்கூட நயமான உரையும் நடிப்புங்கொண்டு

காட்சிகளை இயல்பாகக் காட்டலாம். தாகூர் பேர்னட்ஷா போன்ற பேராசிரியர் நாடகங்கள் இத்தகையன.

இன்பம், துன்பம், அமைதி, ஆத்திரம் முயிலியவற்றிற்கேற்றபடி குரலை மாற்றிப் பொருந்த நடித்தால் அதுவே இனிமை பயக்கும். ஆங்கில நாடகங்கள் அவ்வாறே இனிது நடைபெறுகின்றன. நன்றாகப் பழகியே சபைமுன்வரவேண்டும். இங்கிலாந்து, பிரான்சு தேசங்களில் ஒரு நாடகத்தைப் பல முறை நன்கு நடித்த பிறகே அரங்கேற்றுகின்றனர். மேனாட்டில் நாடகாசிரியர்களை நன்மதித்து அவரிடம் சிரமப்பட்டுப் பாடங் கற்றுக்கொள்ளுகின்றனர். திரைகளைவிட நடிப்பும் பேச்சுமே அங்கு மதிக்கப்படுகின்றன; ஆனால் அவசியமான காட்சிச் சித்திரங்களுக்குக் குறைவிருக்கக் கூடாது. நன்கு கைதேர்ந்த நன் னடையாளரையே மேடையேற்ற வேண்டும்.

---

14 மேடையும் பெண்களும்

பெண்வேஷத்திற்குப் பெண்கள் அமைவது சிறப்பே. ஆனால் ஒழுக்கந்தவறாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

நல்லறிஞரான சதிபதிகள் அப்படி நாடகத்திலும் சதிபதிகளாக நடிப்பதானால் நன்கு. ஒழுக்கம் உயிரினும் நன்று. நமது புதுயுக நாடகப் புலவர் நடனயோகி கள், பரிசுத்தவான்கள். அவர்கள் நாடகத்தை ஒரு அருட்பணியாகப் பொதுநலங்கருதி மேற்கொண்டவர் கள். அத்தகைய தூய கருத்தும், கற்பு நடையும், அமைந்தவர்களை ஏற்கலாம். ஆனால் அவரவர் மனச் சாட்சியைத் தொட்டுப்பார்த்துத் துணிதல் நலம். நடை முறையற்றவர்களைச் சேர்ப்பது நாடகக்கலைமகளின் கற்பைக் கெடுப்பதாகும். அறத்தின் பெருமையைக் காப்போம். பெண்கள் தனித்துத் தாமே சேர்ந்து உற்சாகத்திற்காக நல்ல கதைகளை நடிக்கலாம். பெண் ணின் பெருமையை மிகவும் நன்மதித்தல் பாரத தர்ம மாகும். நடிகர்களும் ஒழுங்கான மனை வாழ்வு வாழ் வோராயின் நலமே. அவர்கள் ஆறுமாதம் சுற்றுப்பிரயா ணத்திலும் ஆறுமாதம் வீட்டிலும் தங்கலாம். மாரிகாலத் தில் நடிகர் தங்கள் ஊரிலேயே தங்கி நாடகங்களைப் பயின்று கொண்டு, காலநிலை ஏற்றதாயிருக்கும்போது வெளியூர்களுக்குச் செல்ல வேண்டும். சுற்றுப்பிரயாணத் திலிருக்கையில் தூயபிரமச்சரியம் காக்க வேண்டும்.

15. நடிகர் ஒழுக்கமுறை.

உடல் நலத்தைப்போற்ற வேண்டும். கடவுள் வழிபாட்டை ஒழுங்காகச் செய்யவேண்டும். தினம் 6–மணி நேரம் உறக்கம், 2–மணி நேரம் தேகப்பயிற்சிக்காக நடத்தல், 2–மணி நேரம் தியான வழிபாடுகள், 2–மணி நேரம் குளித்தல் ஆடை துவைத்தல் உண்ணல் முதலியவற்றிற்குச் செலவிடவேண்டும். காலை 10–மணிக்கும், மாலை 6½–மணிக்கும் சுசிருசியாகச் சாப்பிடவேண்டும். மற்ற நேரம் பசித்தால் பழம், இளநீர், பால் முதலியவை உண்ணலாம். 4½–மணி நேரமே நாடக நடிப்பு–இரவு 7½–மணி முதல் 11½–மணிவரையில். தினம் 3–மணி நேரம் நாடகத்திற்காகத் தயாரிப்பு; மீதி நேரத்தை அமைதியாகக் கழிக்கவேண்டும். வீண் பேச்சுகள், வீண் வினைகள், வீண் பழக்கங்கள், ஊர் வம்புகள் கூடாது. நாடக சகோதரர்கள் உணவைத் தாமே சமைத்துண்பது மிக நலம். புளி மிளகாய்க்கு பதில் எலுமிச்சம் பழமும், மிளகும் சேர்த்துக்கொள்ளலாம். காய்கறிகள், தேங்காய், பால் தயிர், நெய், கைக்குத்தல் அரிசி, பாசிப் பருப்பு–இவை நல்லுணவுப்பொருள்கள். ஆகார சுத்தம்

அவசியம். மலச்சிக்கல், தலைவலி, இந்திரியஸ்கலிதம், வயிற்றுவலி அஜீரணம் முதலிய நோய்கள் ஆகாரசுத்தமும் சித்தசுத்தமும் இல்லாததால் உண்டாவன. ஒழுக்கம் விழுப்பந்தரும். பரிசுத்தவான்கள் நாடகமேடை யேறினால், கலை எழில்பெறும்; குறித்த பயனைத்தரும். மேடையிலும், தனி வாழ்விலும் நாம் சிறந்த உதாரணமாயிருக்கவேண்டும். நம்மைப்பார்த்து, நாடகக்கலையின் புனிதத் தன்மையை உலகம் உணர்ந்து, அதன் வசைகளெல்லாம் ஒழியவேண்டும். நாடகமேடை ஆனந்த நடன சிற்சபையாகப் பொலிந்து பூதவுடல்போர்த்த வுயிர்களுக்கு ஆன்ம வுணர்வு தரவேண்டும்.

---

16. காட்சிப் பொருள்.

இந்த உடல் ஜீவாத்ம மாளிகை; புலன்கள் கதவுகள். அதன் வழியேவரும் இன்பங்களை நுகருவோன் ஜீவாத்மா. புலன்கள் பார்த்துப் பார்த்துப் பழுது நீக்கி நல்லதைக்கொண்டு ஜீவாத்மனுக்குத் துயவாழ்வை நிவேதிப்பதே காட்சியின் உட்பொருள். கண் எங்கும்

கடவுளைக்காண்க! காது அருளுரை பருகுக. உள்ளம், கடவுளை யுணர்க. வாய் கடவுளை வழுத்துக; மூக்கு தெய்வ மணத்தை முகருக; மனம் அகந்தை யொழிந்து, கடவுட் காட்சி காண்க! இதுவே இன்பம்; இவ்வின்பம் நாடகக்கலையின் ஆழ்ந்தபொருள். வாழ்வைக் கடவு ளின்ப வூற்றாக்குவதே கலையின் கருப்பொருள். கலைகள் தேடுவது அழகை. அருளழகே அழகு; அருளுக்கிறை வன் ஆண்டவன். இறைவன் சிந்தனையே கவிதை; படைப்பே சிற்பம்; அதன் அழகே சித்திரம்; படைப் பணிகளின் வாழ்வே நாடகம். இந்த நாடகத்தலைவன் இறைவன்; தலைவி சக்தி; உயிர்களெல்லாம் திருவிளை யாட்டுக்கருவிகள். நாடகக்கலையை நயமுறவளர்த்தால் நாட்டில் அறிவும், ஆண்மையும், பெண்மையும், அன்பும் அருளும், புலமையும் பொலியும்.

---

17. கிரேக்க நாடகம்.

நாடகக்கலை புனிதமான நோக்கத்துடன் எழுந்து உலக நாகரிகத்தை வளர்த்திருப்பதைக் காண்கிறோம்,

தூயமுனிவர்கள் ஆக்கிய இராமாயண பாரத பாகவதக் கதைகள் எண்ணிறந்த நாடகங்களை யுண்டாக்கி பாரத நாகரிகத்தை வளர்த்தது போன்று, கிரேக்க நாட்டில் மஹாகவி ஹோமரின் ஒதஸ்ஸியன், இலியாது (Odyssey, Illiad) இரண்டும் 580 கி.மு. க்குப் பிறகு நாடகக் கலைக்கு ஊற்ருகி, கிரேக்க நாகரிகத்தை வளர்த்தன- வன், ஐரோப்பியக் கலையையே அவை வளர்ந்தன. கடவுளும் தீர்க்க தரிசிகளும் அங்கு வணங்கப்பெற்றனர். கிரேக்கர் அழகையும் ஆற்றலையும், வணங்குவோர். நாடகம், கவிதை, சொல்வன்மை, பாட்டு, சிற்பம், ஓவியம், தோட்டம் வளர்த்தல், அழகிய கட்டிடங்கள் அமைத்தல், கட்டுங்கனமுமாக உடல் வளர்த்தல், முதலிய அழகுக்கலைகளை கிரேக்கர் உயிரெனப் போற்றினர். ஜயதேவர், துளஸிதாஸ்போன்று அக்காலத்தில் கீர்த்தனங்கள் பாடி அருங்கலைத் தொண்டுபுரிந்த பிந்தர் (Pindar) என்னும் கவியை கிரேக்கர் போற்றி வணங்கினர். நம் நாட்டில் ராம பஜனை நடப்பதுபோல வாத்தியங்களுடன் அவர்களும் பாடியாடிப் பரவசமாகிவந்தனர்; கூட்டங் கூடி தெய்வீக வீரர் சரித்திரங்களைப் பாடியாடி நடித்தனர். ஒதிபியஸ் (Oedipius) என்னும் சோகரஸ நாட

கம் எழுதிய **ஸோஃபோக்ளிஸ் (Sophocles)** (440 கி. மு.), திஃபொனிஷியன் வார்ஜினஸ் (phœnician Varginus) முதலிய பதினேழு நாடகங்கள் எழுதிய* யூரிபிடிஸ் (Euripedes) (49 460 கி. மு.) இவ்விருவரும் நாடகக்கலையை நன்கு வளர்த்தனர். **அலெக்ஜாந்தர்** தனது வீரச்செயல்களை உடனுக்குடன் நாடகமாக நடிக்கச்செய்து, பல புலவர்களை ஆதரித்தார். **பெரிக்ளிஸ்** (Pericles) என்பவர் காலத்தில் அரியநாடகப் புலவர் நாட்டை அலங்கரித்தனர். புலவர் **அரிஸ்டோஃபேன்ஸ்** (Aristophens) (425 கி. மு.) காலக்குறைகளைத்தாக்கி நாடகங்களைப் புனைந்தார். **எபிக்யூரஸ் (Epicurus)** என்னும் சுகபோகியின் நண்பர் மீனேண்டர், (291 கி. மு.) மிகவும் அரிய காதல் நாடகங்கள் புனைந்தார். நாடகம் கிரேக்கரின் நாகரிகத்தை வளர்த்தது.

---

* இவர் ஸொக்ராத்தனின் **(Socretes)** நண்பர். அதீனியர் ஸிஸிலித் தீவினருடன் போர்புரிந்து வலிவிழந்து பகைவர் கையிற் பட்டபோது யூரிபிடிஸின் கவிதைளில் ஏதாயினும் ஒன்று சொல்ல வல்லவர்களைப் பகைவர்கள் விடுதலை செய்தனராம்.

18. ரோம் நாடகக்கலை.

ரோம் தேசத்திலும் பாட்டும், நடனமும் தாலிக் (Talic) என்னும் குருமார்களால் கி. மு. 750–ல் ஏற்படுத்தப்பட்டன. பிறகு பொம்மலாட்டங்கள் ஏற்பட்டன. அந்த்ரோனிகஸ் (Livius Andronicus) என்பவர் கிரேக்க நாடகங்களைப் பார்த்து பலசோக, சிருங்கார நாடகங்களை லத்தீன் பாஷையில் எழுதிநடித்தார். என்னியஸ் (Ennius) என்பவர் மிகவும் அரிய சோகரஸ நாடகங்களை எழுதி நாடகக்கலையைத் திறமுடன் வளர்த்தார். கி. மு. 154-ல் ரோமில் முதல் முதல் ஒழுங்காக நாடகமேடையமைக்கப்பட்டது. கி. மு 52–ல் பாம்பே (Pompay) என்னும் ரோம் தலைவர் சுமார் 4000–பேர் இருந்து பார்க்கத்தக்க ஒரு பெரிய நாடகக்கூடம் அமைத்தார். லூசியா அக்யே (Lucius Accius) என்பவர் பல நாடகங்கள் எழுதினர். இவரை அருஞ்சொற்புலவர் ஸிஸிரோ (Cicero) மிகவும் போற்றிவந்தார். அறிஞரும் அமைச்சருமான ஸெநிகா (Seneca) எட்டு அரிய சோகரஸ நாடகங்கள் எழுதினர். ப்ளாதுஸ் (Plautus) என்பார், நாடகத்தில் இலக்கியச் சுவையைப் பெருக்கினர். தேரேன்ஸ் (Terence) என்பார் பல

இன்ப நாடகங்களால் பொதுஜனங்களை உற்சாகப் படுத்தினர். இன்னிசைப்பாக்களால் அக்காலத்தின் கெட்ட பழக்கவழக்கங்களைக்கண்டித்து லூசிய்யஸ் (Lucillus) என்பார், துணிந்த சீர்திருத்த நடிகராக விளங்கினர். ரோம் குடியரசு குலைந்த பின் நாடகத்தின் பெருந்தன்மையும் குலைந்து, பொம்மலாட்டமும், சில்லரைப்பாட்டும் கேலியும், விகடமுமாகி இழிந்தது. போப் கிருகரியின் காலத்தில் மாதா கோயில்களில் கிறிஸ்தவ முனிவர்களின் சரித்திரங்கள் நடிக்கப் பெற்றன. தாந்தே (Dante) பெத்ரார்க் (Petrarch) போகாஸியன் (Boccacio) போன்ற அரும்பெரும் புலவர்மணிகள் விளங்கிய 14-வது நூற்றுண்டிலேயே கலைத்திறமை ஒரு புத்துணர்வு பெற்று, மன்னர் போற்ற, அழகும், அணியும் பூத்துச்செழித்தோங்கியது. லேதஸ் போலியன் (Pollion), கல்லெத்தன் (Galleotto), ஆரியாஸ்தன் (Ariosto) தஸ்ஸோ, (Tasso) கோல்தனி (Goldani) (இவர் 150–இன்ப நாடகங்கள் புனைந்தார்) முதலிய அருங்கலை வாணர் நாடகத்திருவிற்கு இன்னணி சூட்டி ரோம் தேசப் புகழை ஐரோப்பாவெங்கும் பரப்பினர். எநீது (Eneid)

பாடிய லத்தீன் கவியரசான வர்கிலியன் (Virgil) நாடகங்களில் உற்சாகங்கொண்டு ஆதரித்து வந்தார். இக்காலத்தில் எழுதப்பெற்ற அதாம்ஸ் (Adams) என்ற நாடகமே மில்தனின் "இழந்தவிண்" (Paradise Lost) என்னும் காவியமணியை ஊக்கியது. இன்றும் இத்தலிதேசம் நாடகக்கலையிற் சிறந்தோங்கி நாகரிகத்தை வளர்க்கிறது.

---

19. பிரெஞ்சுக்கலைவளம்.

பிரான்ஸிலும் 1548—வரையில் மதசம்பந்தமான நாடகங்களே மன்னர் போற்ற விளங்கின. ழோதெல் (Jodelle 1532–73) என்பவர் முதன் முதலாக முறையான நாடகமேடையமைத்து ஆறு சிறந்த புலவர்களுடன் தனது நாடகங்களை நடத்தத் தொடங்கினர். க்ளெயொபாத்ரா (cléopâtre) என்னும் சோக நாடகத்தை இவர் ஹென்ரி II—ன் முன் நடித்துக்காட்டினர். 4—வது லூயி காலத்தில் சிறுகதைப் பாட்டுகளுடன் நாட்டியம் மேலோங்கியது; பெரிய பிரபுக்களும்

அதில் கலந்துகொண்டனர். 1734 ல் இந்தச் சதுரகள் வலுத்து, சதுராடுவோர் செல்வங்குவித்தனர். அலெக் ஜாந்தர் ஹார்டி என்னும் நடிகர் (1570—1631) பல சில்லரை நாடகங்களை எழுதி நடத்தினர். 1624-ல் கார்தினல் ரிஷலு (Cardinal Richelieu) வின் அதிகாரத்தில் பல நடகப் புலவர்கள் ஆதரவு பெற்ற னர். மன்னர் தனது அரண்மனையிலேயே மேடை யமைத்து நடிகரைப் போற்றினர். (Rotrou 1609 1650) என்ற புலவர் பல சோக, சிருங்கார நாடகங் களை எழுதினர். கோர்நேல் (Corneille), ரஸின் (Racine) என்ற பெரும் புலவர்கள் மன்னர் ஆதர வைப் பெற்றுப் பல நாடகங்களை எழுதி நடித்தனர். கொர்நெல் ஒரு பெரிய வழக்காளர் மைந்தர். சில நாள் சட்டத்தொழில் புரிந்து, அதைவிடுத்து மேடை யேறி னர். இவரது வீர, சோக நாடகங்கள்நெஞ்சை உருக்கும். அனைவரிலும் தலைசிறந்தவர் மோலியர் (Moliere) (1622–1693). தனது ஒப்பற்ற சொல் வன்மையாலும், கவிச்சித்திரத்தாலும் நடிப்புத்திறனுலும், ஹாஸ்யக் கதை களாலும், இன்ப நாடகங்கள் பலநடத்தி, அக்காலத்தில் அரசியலும், சமயமும், வைத்தியர்களும், சமுதாயமும்,

அடைந்திருந்த சீர்கேட்டை வெளிப்படக்காட்டத் துணிந்த இவர் நாடகங்கள் வெகு ரம்மியமாக இருக்கும். இவர் புலமை தனிப் புலமை. இவர் ஹாஸ்யங்கள் எதிரியை உடனே தலை குனிய வைக்கும். **Le Misanthrope, Tartuffe, L'Avare** போன்ற நாடகங்கள் மிகவும் கொண்டாடப்பட்டவை. இவர் நாடகம் போலி சமயாசாரியர்களுக்குச் சவுக்கடி கொடுத்து அவர்கள் பகையையும், பல பிரபுக்களின் எதிர்ப்பையும் அடைந்தது. அரசன் லூயி **XIV** இவரை அந்தரங்கமாக விரும்பி ஆதரித்தது போற்றத்தக்கது. மற்றொரு திறமை சான்ற புலவன் வால்தேர் (**Voltaire**). இவர் பல சோக நாடகங்கள் இலக்கணப்படி எழுதிப் பொது ஜனங்களிடையே பெரிய மாறுதல்களை உண்டாக்கினார். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு நாடகக்கலையில் சில ஆபாசங்கள்புகுந்தன; இக்காலத்தில் தால்மா (**Talma**) என்பவர் நெப்போலியனால் பெரிதும் நேசிக்கப்பட்டுச் சிறந்த நடிகராக விளங்கினார். இதன் பிறகு சிறந்த நாவலனும் வீரக்கவியரசருமான விக்தர்ஹ்யூகோ விளங்கினார். இவர் தந்தை தளகர்த்தர். விக்தர்ஹ்யூகோ தனது ஏழாவது வயதில் நெப்போலியனைக் கண்டார்

இவர் பிறவிக் கவி; இவர் கவிகள் வீரக் கனல்மலர்கள்; கதைகள் நெஞ்சை உருக்கும்; நாடகங்களும் அவ்வாறே. லே மிஸாபிள்ஸ் ஹெர்நாநி, க்ராம்வெல், லெஸ் ஓரியந்தல்ஸ் என்பன ஒப்பற்ற இலக்கியங்கள். ஹ்யூகோ பிரெஞ்சுக்கலைக்கழகத்தில்அங்கம் வகித்து,1848-ம்ஆண்டுப் புரட்சிக்குப்பின் சட்டசபையில் சுதந்திர முழக்கம் செய்து, நாட்டின் கல்வி, இலக்கியம், உரிமை வளர்ச்சிக்கு அருந்தொண் டாற்றி 1885ல், 83வது வயதில் பொய்யுடலை நீத்து இன்னும் புகழுடம்பில் வாழுகிறார். இக்காலம் மற்றொரு சிறந்த நாவலரும் நாடகாசிரியருமான தூமா (Alexandre Dumas) 1803-1870) சிறந்துவிளங்கினர். Mont Cristo, அவர் எழுதிய சிறந்த நூல். இன்றும் ரோமன் ரோலந்து போன்ற சிறந்த நாவலரும், பாவலரும், நாடகப்புலவர்களும் பிரெஞ்சுக்கலையை வளர்த்து வருகின்றனர்.

---

20. ஸ்பெயின்.

வீரனும் நாவலனுமான Cerventes (ஸெர்வாந்து) பல நாடகங்கள் எழுதிய புலவர். Lope de Vega

(லோப் தி வேகன்,) Colderan (கால்டெரன்) முதலிய அரும்புலவர் மணிகள் ஸ்பெயினில் கலை வளர்த்தனர். போர்த்துகல் நாட்டிலும் அல்பான்ஸோ மன்னர் தானே கவியாக விளங்கிக் கலைகளைப் போற்றினர். கமோன் (Camoens 1525-80) போர்த்துகல் கவியரசன். இவர் வாஸ்கோடிகாமாவைப் பற்றி ஒரு மஹா காவியம் இயற்றி இசைபெற்றார்.

---

21. ஜெர்மனி.

ஜெர்மனியில் பத்தாவது நூற்றாண்டு மட்டும் சமய கீதங்களே பாடப்பெற்றன. பிறகு Hrotsvitha (ஹரோத்ஸ்விதை) என்னும் துறவினி முனிவர் சரிதைகளை நாடகமாக எழுதினள். மார்த்தின் லூதர் தனது புதிய வுணர்ச்சியை நாடகத்தின்மூலம் பரவச் செய்தார். பதினெட்டாவது நூற்றாண்டில்தான் ஜெர்மன் நாடகக் கலை அமோகமாக வளர்ந்தது. இரண்டாவது யோசேப் மன்னர் நாடகத்தைப் பெரிதும் ஆதரித்தார். Schlegal. Schiller Goethe(ஸ்லெகல், ஷில்லர்,கெதே) போன்ற

பெரும் புலவர் மணிகள் இப்போது விளங்கினர். ஷில்லரின் சரித்திர நாடகங்கள் மிக மிக அருமையானவை. Maid of Orleans, William Tell, Wallenstein போன்றவை அவர் எழுதிய ஒப்பற்ற நாடகங்கள். கேதே கவியரசு; அவர் எழுதிய ஃபாஸ்ட் (Faust) உலகிற் சிறந்த நாடகமணிகளில் ஒன்று.

---

23. ரஷ்யா, டென்மார்க்கு.

ரஷ்யா தேசத்தில் நாடகமேடை பொதுஜனக் கல்வி மன்றமாக விளங்கி, அரிய அறிவையும், வீரவுணர்ச்சியையும், சமரஸத்தையும் புகட்டி சமூக சீர்திருத்தம் செய்து வருகிறது. தோல்ஸ்தாய், லெனின், மார்க்ஸ், முதலிய பெரியோர்களின் உபதேசங்கள் ரஷிய நாடகமேடையில் உருக்கொண்டு விளையாடுகின்றன. 1756-ல் முதல் நாடகமேடை ஸெய்ண்ட் பீடர்ஸ்பர்கில் எற்பட்டது. வீஸின், புஷ்கின் முதலிய சிறந்த புலவர்கள் ருஷிய மேடையை அலங்கரித்தனர். டென்மார்க்கில் ஹோல்பர்க் (1705-1774)

எனும் புலவர் மணியின் நாடகங்கள் இசை பெற்றன. டேனிஷ்காரர்களுக்கு மொழிப்பற்று மிகுதி. பாட்டு, நாடகங்களைத் தங்கள் மொழியிலேயே ஆக்க ஊக்கங் கொண்டு, கலை வளர்த்தனர். ஹாலண்டில் ஒந்தெல் (Vondel) எனும் புலவர் நாடகக்கலை வளர்த்தார்.

---

23. இங்கிலாந்து.

இங்கிலாந்தின் புகழ்முடியை விளக்க உலகத்தையே நாடகமேடையிற் கொணர்ந்த புலவர் சிங்கமான ஷேக்ஸ்பியரே போதும். கி. மு. 55. முதல் இங்கிலாந்து கலை வளர்த்து வந்தது. கவிக்கினிது ஆங்கிலம்; சொற்கினிது பிரெஞ்சு. 1066–1216 மட்டும் தெருக்கூத்துகள் நடந்து வந்தன. பிறகு மத சம்பந்தமான அதிசய கேளிகளை (Miracles and Mysteries) மத போதகர்கள் ஏற்படுத்தினர். 8-வது ஹென்றி நாடகத்திற்குப் பேராதரவீந்தார். அப்போது பல நாடக மன்றங்கள் புலவர்களை ஊக்கின. டியூடர் மன்னர்காலத்தில் பல புலவர்கள் நாடகக்கலையை வளர்த்தனர். கிரீன்

(Greene) மார்லோ, பீல், ஜான் ஹேவுட், தாமஸ் ஹேவுட் முதலிய அரிய புலவர் மணிகளுக்குப்பின் நாடக வாணியே ஆணுருவெடுத்தாற்போல ஷேக்ஸ்பியர் தோன்றினர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் படிக்கப்படிக்கத் தெவிட்டாதன. கிங் லியர் ஹாம்லட், மாக்பேத் ஒதேல்லோ ரோமியோ—ஜூலியத் இவை நாடகங்களில் தலை சிறந்தவை. சரித்திர நாடகங்களில் Beamount, Fletcher, இருவரும் சிறந்து விளங்கினும் ஷேக்ஸ்பியரின் கிங்ஜான் ஹென்ரி VI, ரிச்சார்ட் III இவற்றிற்கு இணையில்லை. சிருங்கார நாடகத்தில் பென்ஜான்ஸன் பெயர்பெற்றிருப்பினும் ஷேக்ஸ்பியரின் As You Like It, Mid Summer Night's Dream, Tempest, இம் மூன்றும் ஒப்பற்ற இன்ப நாடகங்களாக விளங்குகின்றன. வேறு பாஷைகளில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை மொழிபெயர்த்தால் சுவை போய்விடுகிறது. பென்ஜான்ஸன் எழுதிய Every Man In His Humour, Volpone The Silent Woman முதலிய நாடகங்கள் மனோரஞ்ஜனமானவை. Chapman, Deakker, Middleton, Phillip Massinger, Nothinial Field, John Ford,

James Shirley, Randolph, முதலிய பல சிறந்த நாடகாசிரியர்கள் அரிய நாடகங்கள் எழுதியுள்ளனர். அருட்புலமைவாய்ந்த மில்தன் தனது தெய்வீகக் காவியமான Paradise Lost, Paradise Regained ஐத் தவிர Arcades, Comus என்ற சிறந்த நாடகங்களை எழுதியுள்ளார். Dryden, Thomas Otway, இருவரும் அரிய நாடகாசிரியர்கள். 1741ல் காரிக் என்னும் பெரும்புலவர் நடிப்புக்கலையில் இசைபெற்றிருந்தார். இவரை ஜான்ஸன் மிகவும் மெச்சிவந்தார். ஷெரிடன் மற்றொரு சிறந்த நாடகாசிரியர். அவர் எழுதிய Rivals சிறந்த நாடகம். அடிஸன் டெனிஸன் இவர்களும் நாடகம் எழுதியுள்ளனர். இன்னும் எத்தனையோ அரிய நாடகப்புலவர்கள் ஆங்கில மேடையை அலங்கரித்தனர். தற்போது பெர்னட்ஷா சொல்லுறுதிக்கும், காட்சி நயத்திற்கும், நகைச்சுவைக்கும், துணிந்துரைக்கும் மிகச் சிறந்துவிளங்குகின்றார். இவர் எழுதிய Joan of Arc ஒப்பற்ற நாடகம். இவ்வாறு ஆங்கிலவுலகில் நாடகமடந்தை இசைமுடி தரித்து இன்பச் சிங்காதனம் வகித்து விளங்குகின்றாள்.

24. சைனு, ஜப்பான்.

சைனுவில் ஊருக்கு ஊர் நாடக மன்றங்கள் உள்ளன. சீனர்கள் நாடகத்தில் மிகவும் உற்சாகங் காட்டுகின்றனர். விசேஷ நாட்களிலெல்லாம் நாடகம் நடிப்பதை ஒரு இன்பமாகக் கொண்டாடுகின்றனர். சீனு கலையழகுச்செல்வி. ஜப்பானில் 1624ம் ஆண்டு நாடக மன்றம் ஒழுங்காக அமைக்கப்பெற்றது. அதற்கு முன்பே அரிய நாடகாசிரியர்கள் இருந்தனர். காதா காவஸ்து (Kada Kawastu) என்பவரும் இஸ்நே ஜான்ஜி எனும் மாதும் பல அரிய நாடகங்கள் புனைந்துள்ளனர். ஜப்பானியர் சங்கீதம், நாட்டியம் நாடகக்கலைகளை மிகவும் நன்மதிக்கின்றனர். தற்போது நாடகம் அறிவு வளர்ச்சிக்குப் பெரும் பயனுகிறது.

---

25. பாரதக்கலை

இவ்வாறு உலகெங்கும், நாடுதோறும் நாடகக் கலையை நனிவளர்க்கின்றனர். இவற்றிற்கெல்லாம்

மேலோங்கி, கல்வி, ஞானம், கலை அணி, அழகு, அருள், கடவுளன்பு,ஆத்மானுபூதிச் செல்வம், கவிவளம், இலக்கியப் பெருக்கம், பெரியோர் எழுதிய அருட்பா வளம் மல்கிய நமது பாரததேசம் இன்றும் நாடகக் கலையிற் பின்னடையவில்லை. சகுந்தலம், உத்தர ராம சரித்திரம் மிருச்சகடி, விக்ரமோர்வசியம், ரத்னவளி, நாகானந்தம் மாலதி மாதவம், வேணீ ஸம்ஹாரம், ப்ரஸன்ன ராகவம் முத்ராராக்ஷஸம், ப்ரபோத சந்த்ரோதயம் முதலிய பழஞ் செல்வ நிதிகள் நமக்குள்ளன. முருகன் மொழிந்த முத்தமிழிலும் பெருநாரை, பெருங்குருகு, நாரதரின் பஞ்ச பாரதீயம் சாரகுமாரரின் இசை நுணுக்கம் முதலிய அரிய இசை நூல்களும், முறுவல், சயந்தம் குணநூல் கூத்த நூல் செயிற்றியம் மதிவாணர் நாடகத் தமிழ் முதலிய பல கூத்தநூல்களும் இருந்தன; காலக் கரையானுக்கு இரையாகி மறைந்தன. நாடகத் தமிழ் இப்போதுதான் துளிர்விட்டுக்கொண்டிருக்கிறது. அதில் இனி நறுமண மலர்கள் குலுங்கும்; இசை வண்டுகள் முரலும்; குயில்கள் அகவும், மயில்கள் நடமாடும். இன்று வங்காளம் நாடகக்கலையை மிகவும் உன்னதிக்குக் கொண்டுவந்துள்ளது. கிரீஷ்சந்த்ரகோஷ் சுமார் அறு

பது நாடகங்களுக்கு ஆசிரியராய் "வங்காளத்து ஷேக்ஸ் பியர், காரிக்" என்று பெயர் பெற்று விளங்கினார். துவி ஜேந்திரராய் அரிய வீர நாடகங்கள் எழுதிச்சென்றார். அவருக்குப் பின் தாகூர் சிறந்து விளங்குகிறார். ஹிந்தியிலும் சிறந்த நாடகங்கள் எழுதப்பட்டுத் திறமை யுடன் நடைபெறுகின்றன கன்னட நாடகங்களுக்கு மைசூர் மன்னரே பேராதரவு தருகிறார். ஆந்திரரும் நாடகக்கலையைக் கண்ணெனக் காக்கின்றனர். மஹாராஷ் ட்ரம் சரித்திர நாடகங்களுக்குப் பெயர்பெற்று விளங்கு கிறது. தமிழ் உறங்குவதா? காலதேவி பல நாடுகளிலும் குவித்து வைத்துள்ள அருங்கலைச் செல்வத்தை நுகர்ந்து தானும் பழம் புதுச்செல்வியாக விளங்கவேண்டும். தமிழ்ச் செய்யுள்மிகவும் அரியது—ஆயிரம் வகையான இன்பந்தரத் தக்கது. அணியும், அழகும், இன்பமும் சொற்றிறனும், பண்ணும், பண்பும், காட்சியும், கதைச் சிறப்பும், ஆன்மவுன்னதியும் அன்புப்பெருக்கும் நிறைந்த பல நாடகங்கள் வேண்டும். உலகின்முன் தமிழ் தலை நிமிர்ந்து நிற்றல் வேண்டும். நாடகம் கடவுட் கலையாக விளங்கவேண்டும். இதற்காகவே சுமார் 50 அரிய நாட கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன—அருட்பெரியார் திருவ

ரலாறும், இசை பெறு வீரர், இன்னிளங்காதலர், வசை யறு புலவர், வள்ளலார், வேந்தர் நல்வரலாறும், பல்வகை யுலகின் இயல்பும் பிறவும் பொருந்தக் காட்டித் திருந்த நடிக்க நாடக நூல்கள் பீடுறப் பொலிகவே!

---

26. தமிழ்க்கலை.

கடல், காற்று, மழை, வான், புவி எங்கும் இசை நிறைந்துள்ளது; உயிர் விரும்பும் பொருள் இன்பம். இசை இன்ப வெள்ளம்; அது தன்னை யறியாத ஒரு களிப்புக் கடலில் நம்மைக் குளிப்பாட்டும். தனித்திருக்கும்போதும், தோழருடன் ஆடும்போதும் இசை நம்மையறியாது வெளிவருகிறது. இசை உயிர் நிறைவு, உயிரின்பம், உயிரியல்பு! இசையற்ற வாழ்வு வசை. இசை உலகளாவியது; அது எம்மொழியும் தன்மொழியானது, எம்மதமுந்தன்மதமானது; எம் மனத்தையும் தன்மயமாக்கவல்லது. இசையின் ஆற்றல் அளவற்றது. மனித வாழ்வு அழகும், அணியும், இன்ப மும், அன்பும், நிறைந்த செல்வச் சித்திரமாவதற்கு முத

வில் வேண்டற்பாலது இசை. இசையினின்று ஓவியம் வளரும்; இராமாயண பாரத பாகவதப் பாட்டுகளினின்று எத்தனை ஓவியக் கலைகளும் சிற்பங்களும் பெருகி யோங்குகின்றன சித்திரம் நாடகம், நடனம் இசையின் செல்வர்; இறைவன் எங்குமிருப்பது போல இசையும் எங்குமுள்ளது. அது நாதப்ரம்மம். இசை வளர்ச்சி என்றும் எல்லா மக்களுக்கும் பொதுவேயாகும். ஒரு குயில் அகவுகிறது; அதன் இன்பத்தை சாதிசமய வேற்றுமையின்றி அனைவரும் நுகருகிறோம். அதுபோல இசையும் அனைவர்க்கும் பொதுவேயாகும். அது ஒரு மொழியின் குத்தகையல்ல. இசை யென்பது உயிருக்குஉயிரான இன்பத்தினின்று பொங்கியெழும் நாதவூற்றாகும். குயில், கிளி, மைனா, புல்புல், வானம்பாடி, காக்கை முதலிய பறவைகள் தத்தமக்கிசைந்தவாறு பாடிக்களிப்பதுபோல உலகில் பல மொழியினரும் தத்தமது மொழிவளமைக் கேற்றவாறு இசையமைத்துக்கொள்கின்றனர். அவரவரிசை கேட்டு அவரவர் களி கூத்தாடுகின்றனர்.

நமது தமிழ்ச்செல்வி சுமார் 10000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் பொருந்தி செல்வக்கலையணிந்து

புலவர் நாவிலும், மன்னர் மன்றிலும், மக்கள் அன்பிலும், அருட்பெருமையுடன் விளங்கினுள். தமிழர் உலகின் தொல்மரபினர்; தமிழ் தொன்மொழி. தமிழ்மொழி ஆயிரங்கலைச் செல்வமணிந்து நிலவிய திருமொழி. தமிழ் கடவுள் மணமும், கடவுட் பொலிவும், கடவுளன்பும், கடவுள் வீரமும், கடவுட் செல்வமும் விளங்கி வளரும் மொழியரசி. தமிழர் சிற்பத் தேர்ச்சி ஒவ்வொரு ஆலயத்துள்ளும் பேசுகிறது. தமிழரின் கவிப்புலமை சிலப்பதிகாரம், குறள், கம்பன், சிந்தாமணி, பெரிய புராணங்களின் உள்ளத்தினின்று இன்ப வெள்ளமாகப் பாய்கிறது. தமிழரின் இசை வளமோ தேவார திருவாசகங்களிலும், ஆழ்வாராதிகளின் பாசுரங்களிலும் என்பும் உருக அன்புக் கனலாகப் பரவி உள்ளத்தை அள்ளுகிறது. தமிழிலுள்ள ஆர்வத்தாலன்றோ நமது சமயப்பெரியார்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது உள்ளன்பை இசைபெருகும் இன்பத் தமிழ் வெள்ளமாகப் பாய்ச்சினர்! சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதையில் தமிழிசையும், அரங்காடலும், கூத்தும் அக்காலத்திற் பெற்றிருந்த செழுமை நன்கு புலனுகும். மொழி மூவகைத்து. (க)

இசைமொழி (சங்கீதம்) (2) நடிப்பு மொழி (கூத்து, நாடகம்,) (3) இயல்மொழி (இலக்கியம்) இயலுடலும் இசை நாடக இறக்கைகளும் கொண்டு கடவுள் வானிற் பறக்கும் இன்னருட் கருடன் போன்றது தமிழ். இயற்றமிழ் நூல்கள் இன்று சில எஞ்சியுள்ளன. இசை நூல்கள் அங்குமிங்கும் குறிப்பாயுள்ளன; நாடக நூல்களும் அவ்வாறே. தமிழ் மிகப் பழந்திருமொழி. அதன் மிக மிக அரிய பெரிய கலைவளத்தைக் கடலனர் விழுங்கி இன்னும் ஏப்பம் விடுகிறார். தமிழர் தமிழ்க்கடலைக் கடைந்து புதிய புதிய இன்பக் கலைகளைக் காணவேண்டுமென்று ஆண்டன் திருவுளம் போலும்! பழமை பேசிப் பயனில்லை. பழமையால் ஒரு ஊக்கம் பிறக்கக்கூடும். ஆனால் புதிய கலை வளர்ச்சியில் முனைந்தால்தான் தமிழை உண்மையாக முன்னேற்றமுடியும்.

தமிழில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, தாயுமானவர், திருப்புகழ், இராமாயண கீர்த்தனங்கள், அருள் வள்ளலார் பாடல்கள், தற்காலப் புலவர்களின் பாடல்கள் முதலிய பல இசைச் செல்வங்கள் உள்ளன. தமிழ் வற்ருப்பாலூற்று. அவ்வூற்றைப் புதுக்கலை வளரப்பாய்ச்சுவோம். தமிழ்மொழியின் பழம்பெருமை

மற்றெம்மொழியினும் பெரிதெனினும், தற்போது தமிழ் படும் சிறுமையும் மற்றெம்மொழியினும் பெரிதாகவே யிருக்கிறது. இரு நிதிச் செல்வத்தை வைத்துக் கொண்டு நம்மை எற்றி மிதிப்போன் வாயலில் ஐயம் புகுவது போன்றது, தமிழர் தமிழைப்புறக்கணித்து,பிற மொழிகளில் மோகங்கொண்டிருத்தல். தமிழை இன்னும் ஆயிரம் வகையாக வளர்த்து உலகம் தமிழருமையை வணங்கச் செய்தல்வேண்டும். பல மொழிகளின் நயங் களையும், சீர்களையும் தமிழுக்கு உரிமையாக்கித் தமிழ்ச் செல்வத்தைப் பெருக்கவேண்டும். அதற்கேற்ற கடவுட் புலமையாளரும் அருட்கவிகளும் இன்றும் நம்மெதிரே யுள்ளனர். ஆனால் அவர்களை அறிந்து போற்றுவாரிலர்.

"வானுறு மதியை யடைந்ததுன் வதனம்
வையக மடைந்ததுன் கீர்த்தி;
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்;
கற்பக மடைந்த நின் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடஞ்சேர்ந்தாள்;
செந்தழல் புகுந்ததுன் மேனி;
யானுமேன் கவியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்திநா யகனே!"

என்னும் கதிக்குத் தமிழ் வந்துகொண்டிருக்கிறது. நாளை எப்படியாமோ! ஆதலின் "தமிழ் தமிழ்" என்று அல்லும் பகலும் உயிர்த்தல்ஒவ்வொரு தமிழன் கடமையுமாகும். வங்கச்செல்வி சிங்காரக் கவிவீணையால்மனிதரை மோகப்படுத்துகிறாள். ஹிந்தி இந்தியாவையே வெல்லப்போகிறது; நமக்கடுத்தாற்போலுள்ள ஆந்திரம் வீரவிழிப்புற்றுக் கலையும், கவியும் புதுமையும் பெற்று விளங்குகிறது; மராத்தி பாஷையும் கணக்கற்ற கவிவளம் பொருந்தியுள்ளது. குஜராத்தியும் ஹிந்தியைப் போலவே சீரோங்கி வருகிறது; அனைத்திலும் மேனாட்டு வேகம் பரவி வருகிறது. தமிழ் என்ன செய்கிறது? பழமை பேசிப் புதுமையை வெல்ல முடியுமா? அக்பர் சாம்ராஜ்யமாண்டால் ஷா ஆலத்திற்கென்ன? "ராமர் இலங்கையிலிருந்து விமானத்திற் போகவில்லையா, இப்போதுள்ள ஆகாயவிமானம் என்ன அதிசயம்" என்று சொல்லும் பேதமை வேண்டாம்! ராமரின் வீர இந்தியா இன்று எப்படி இருக்கிறது? முன் சிறப்புகள் பல இருக்கலாம், அவற்றையே பேசிப் பயனில்லை, இன்று தமிழ் சிறுமையுற்றுள்ளது. தமிழைப் பெருமைப்படுத்த வாருங்கள்! கவி, கலை, இசை, நாடகம், சிற்பம், சித்திரம்

தொழில், அறிவு, நாகரிகம், அரசியல், சமுதாய வாழ்வு அனைத்திலும் தமிழ் சிறப்புறவேண்டும். புதுயுகக்குயில் கள் வருக! வசந்தம் மலர்ந்தது!

இளந்தமிழ் வாழ்க!
எந்தாய் வாழ்கவே!!

Sandhanam Printing Works, Pondicherry.